உபயம் : செவ்லூர்

## பழ. ராமநாதன் (மணி)

காமாட்சி அம்மன் பேங்கர்ஸ் - தஞ்சை

செல் : 7639069747

## ராம. பழனியப்பன்

Dynatrade - DUBAI

## ராம. சோமசுந்தரம்

Oracle Corporation - USA

ஸ்டார்லைட் பவர் ப்ரெஸ், சென்னை - 23.
2674 1235, 2646 1721
☎94443 81235, 94446 88631

உ







அருள்மிகு

# சோணையன் பாமாலை

பா ஆக்கம் கவிஞர்

பங்காளி இராம. ஆண்டியப்ப செட்டியார்

வேகுப்பட்டி

உ

சிவமயம்





அருள்மிகு

# சோணையன்
# பாமாலை

("ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்" என்ற மெட்டு)

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !

ஓமக்காட்டிலே ஒ-யாரமாயிருக்கும்
ஒப்பற்ற சோணையா வா !

யாவர்க்கும் துணையாகி அனைவர்க்கும் அருள்கின்ற
அன்பான தெ-வமே வா !

சாமத்தில் நினைத்து உனை சோணையா என்றதும்
ஆபத்தில் காக்க நீ வா !

ஆரத்தி தீபங்கள் அருமையா- சாம்பிராணி
வாசத்தில் வரும் ஐயா வா !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !



உயிருக்கு உயிரான உனைநாங்கள் கொண்டாட
உடனிருந்து காக்க வேண்டும் !

நாவிற்கு இனிதா- நின்நாமத்தைச் சொல்லவே
நலங்களை நல்க வேண்டும் !

மேனிக்கு மருந்தாகி மேலான நலம் தந்து
மேன்மையா- வாழ வேண்டும் !

காணிக்கை செலுத்தியுனை போற்றுவோர் தமக்கென்றும்
குறையாத செல்வம் வேண்டும் !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !

கயவர்கள் கபடர்கள் கொள்ளையர் பயமின்றி
காக்கவே கத்தி கொண்டா- !

அனைவர்க்கும் நலம் தர நிலையான வடிவிலே
சுக்குமாந்தடியும் கொண்டா- !

அழகான முகமது பயமாகத் தோன்றவே
ஆங்கார மீசை கொண்டா- !

கலையாது கொண்டையைக் கட்டியே வைத்து நீ
காக்கின்ற தோற்றம் கொண்டா- !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !



ஆறுஊர்ப் பங்காளி கூடியே படைக்கின்ற
அறுசுவையை ஏற்க வாவா !

ஆணிக்குறட்டிலே ஏறி நீ சொல்கின்ற
அருள்வாக்குப் பலிக்க வாவா !

அள்ளியே பூசிய விபூதி முகத்துடன்
அனைவர்க்கும் அருள வாவா !

கையிலே பிடித்தநல் கத்தியும் வேலுடன்
காட்சிதர ஆடி வாவா !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !

எந்நாளும் உன்னையே எங்களது தெ-வமா-
கண்ணாகப் போற்றுகின்றோம் !

முன்னாலே தோன்றியே முதல் ஆளா- வந்து நாள்
முழுவதும் காக்க வேண்டும் !

"அண்ணே" என்றுனை அன்புடன் அழைத்ததும்
அடுத்து நீ நிற்க வேண்டும் !

பொன்னையும் பொருளையும் நல்லதோர் வாழ்வையும்
நாளெல்லாம் நல்க வேண்டும் !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !



பொழுதெலாம் கருத்துடன் பலமுறை தேடியும்
போனபொருள் கிடைக்கவில்லை !

பொன்னான சோணையன் காணிக்கை முடிந்ததும்
கண்முன்னே கிடைக்கச்செ-தா- !

காரியம் துவங்குமுன் சோணையன் நினைவுடன்
காசினை முடிந்து வைப்போம் !

வாரியே அருளினை வழங்குவா- செயலெலாம்
சீருடன் நடக்கக் காண்போம் !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !

வம்பர்கள் சிலரது தொல்லையால் எளியவர்
வாழ்க்கையே சிரமம் ஆகும் !

சோகத்தைப் போக்கிட சோணையனை நினைத்திட
சோர்ந்திடும் பகைவர் கூட்டம் !

அநியாயம் செ-தெம்மை அரட்டிடும் மனிதர்கள்
அடங்கிட அருள வேண்டும் !

அன்பர்கள் போலிருந்து துன்பந்தரு கயவர்கள்
அழிந்திடச் செ-ய வேண்டும் !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !



தொழிலது செழித்திட தேர்வினில் வென்றிட
துணைபுரிய வேண்டுமையா !

திருமணம் நடந்திட குழந்தையும் பிறந்திட
அருள்புரிய வேண்டுமையா !

உறவுகள் போற்றிட உறைவிடம் பெற்றிட
வழிபுரிய வேண்டுமையா !

வாழ்வது சிறப்புற புகழுடன் திகழ்ந்திட
நலம்புரிய வேண்டுமையா !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !

மனநலம் உடல்நலம் மாந்தர்க்கு நலிவின்றி
மங்காது இருக்க வேண்டும் !

மருத்துவம் இன்றியே மனதினில் நினைக்கையில்
மருந்தாகிக் காக்க வேண்டும் !

வெளியினில் செல்கையில் வேலையில் திளைக்கையில்
ஆபத்தை நீக்க வேண்டும் !

வேதனை செ-கின்ற விலங்குகள் பூச்சிகள்
விலகியே ஓட வேண்டும் !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !



சோணையன் இருக்கிறான் சோகத்தை நீக்குவான்
சொத்தினைக் காப்பான் என்பர் !

நல்லவர் வருந்திடத் தீமைகள் செ-திடின்
நியாயத்தைக் கேட்பான் என்பர் !

எக்கணம் நினைத்தாலும் எவ்விடம் அழைத்தாலும்
அக்கணம் ஓடி வருவா- !

நித்தமும் கொண்டாடும் நின்குல மக்களை
நலியாது காக்க வருவா- !

மாயாண்டி கருப்பையா ஆச்சியம்மன் தொட்டிச்சி
மறக்காமல் காக்க வருக !

மனதாரக் கொண்டாடும் குலதெ-வம் சோணையா
மேலான வாழ்வு தருக !